
# காடி குடுவைக்குள் பாட்டி

தமிழில் கிருஷ்ணன்



ஒரு சமயம் பாட்டி ஒருவர் காடி குடுவையில் வாழ்ந்து வந்தாளாம். ஏன் குடுவை என்று கேட்க கூடாது. இது ஒரு கற்பனை.
குடுவை கொஞ்சம் பெரிதாகவே இருந்தது. ஒரு சிறிய வீட்டின் அளவு இருந்தது என்று கூட சொல்லலாம்.

ஒவ்வொரு நாளும் பாட்டி வாசலில் உட்கார்ந்து கொண்டு புலம்பி கொண்டிருப்பாள்.
“என்ன பாவம் நான் செய்தேனோ!
நான் இந்த சிறிய குடுவையில் அடைந்து கிடக்கிறேன்
என்னை போன்ற பெண் ஒரு குடிசையில் அல்லவா வசிக்க வேண்டும்.
அந்த குடிசையை சுற்றி ரோஜா பூக்கள் வளர்ந்திருக்க வேண்டும்.
அந்த வாழ்க்கை தானே என்போன்ற பெண்மணிக்கு அழகு.”

அந்த சமயம் பார்த்து தேவதை குடுவையை கடந்து சென்று கொண்டிருந்தாள்.





“இந்த வயதான பாட்டியின் ஆசையை
நிறைவேற்றினால்  என்ன ?” என்று தோணியது தேவதைக்கு.
“குடிசை தான் வேண்டுமென்றால் அப்படியே ஆகட்டும்…
வயதான பாட்டியிடம் தேவதை கூறினாள்.
“நீ இன்று இரவு மெத்தையில் உறங்க போகும் போது
மூன்று முறை திரும்பி படுத்து கண்ணை மூடிக்கொள்
அடுத்த நாள் உனக்கு என்ன வேண்டுமோ அதை நீ
அடைவாய்” என்று கூறினாள் தேவதை.

முதலில் இந்த தேவதை சொல்வது பொய் என்று நினைத்தாள்
பாட்டி.
பிறகு மெத்தையில் இரவு உறங்க போன பொது தேவதை
சொன்னது போல்
மூன்று முறை திரும்பி படுத்து கண்ணை மூடி கொண்டாள்.
காலையில் கண்விழித்து பார்த்தாள்.







பாட்டி ஒரு அழகான குடிசையில் இருந்தாள்.
அந்த குடிசையை சுற்றி ரோஜா பூக்கள்
இருந்தன. மண் சுவரில் பூக்கள்
வளர்ந்திருந்தது.
“எனக்கு உகந்த வீடு இது தானே
நான் இதில் சந்தோஷமாக இருக்க
போகிறேன்” என்றாள் பாட்டி
தான் நினைத்தது கிடைத்த போதும் பாட்டி ஒரு
முறை கூட மனதில் தேவதைக்கு நன்றி
கூறவில்லை




தேவதையும் மேற்கு திசைக்கு சென்றாள்
பிறகு தெற்கு திசைக்கு சென்றாள்
அதன் பின் வடக்கும், கிழக்கும் சென்றாள்
அவளுடைய கடமைகளை முடித்து வந்தாள்.

ஒரு நாள் அந்த பாட்டியின் ஞாபகம்
தேவதைக்கு வந்தது.
“காடி குடுவையில் வாழ்ந்து வந்த  பாட்டி எப்படி
இருக்கிறாளோ?” என்று எண்ணினாள்.

ஒரு நாள் தேவதை பாட்டியை பார்க்க வந்தாள்.

பாட்டி வாசலில் உட்கார்ந்து கொண்டு புலம்பி
கொண்டிருந்தாள் .
“என்ன பாவம் நான் செய்தேனோ!
நான் இந்த சிறிய குடிசையில் அடைந்து
கிடக்கிறேன்
என்னை போன்ற பெண் ஒரு நல்ல வீட்டில்
அல்லவா வசிக்க வேண்டும்.
அந்த வீட்டின் ஜன்னலில் திரைச்சீலை
இட்டிருக்க வேண்டும். நல்ல செம்பு பிடிகள்
உள்ள கதவுகள் இருக்க வேண்டும்.
அந்த வாழ்க்கை தானே என்போன்ற
பெண்மணிக்கு அழகு.”





“இந்த வயதான பாட்டியின் ஆசையை நிறைவேற்றினால்  என்ன ? இது எனக்கு ஒன்னும் பெரிய விஷயம் இல்லை.” என்று நினைத்தாள் தேவதை.
“வீடு  தான் வேண்டுமென்றால் அப்படியே ஆகட்டும். அந்த வீட்டின் ஜன்னலில் திரைச்சீலை இருக்கும் . நல்ல செம்பு பிடிகள் உள்ள கதவுகளும் இருக்கும்.”
என்று வயதான பாட்டியிடம் தேவதை கூறினாள்.
“நீ இன்று இரவு மெத்தையில் உறங்க போகும் போது
மூன்று முறை திரும்பி படுத்து கண்ணை மூடிக்கொள்
அடுத்த நாள் உனக்கு என்ன வேண்டுமோ அதை நீ அடைவாய்” என்று கூறி
சென்றாள் தேவதை.

இப்போது பாட்டிக்கு எந்த சந்தேகமும் இல்லை.
மெத்தையில் இரவு உறங்க போன பொது தேவதை சொன்னது போல
மூன்று முறை திரும்பி படுத்து கண்ணை மூடி கொண்டாள்.
காலையில் கண்விழித்து பார்த்தாள்.

பாட்டி ஒரு அழகான மாடி
வீட்டில்  இருந்தாள்.
அந்த வீட்டின் ஜன்னலில் திரைச்சீலை
இருந்தது. நல்ல செம்பு பிடிகள் உள்ள
கதவுகளும் இருந்தது."
"எனக்கு உகந்த வீடு இது தானே
நான் இதில் சந்தோஷமாக இருக்க
போகிறேன்" என்றாள் பாட்டி
தான் நினைத்தது கிடைத்த போதும் பாட்டி
ஒரு முறை கூட மனதில் தேவதைக்கு நன்றி
கூறவில்லை.

தேவதையும் மேற்கு திசைக்கு சென்றாள்
பிறகு தெற்கு திசைக்கு சென்றாள்
அதன் பின் வடக்கும், கிழக்கும் சென்றாள்
அவளுடைய கடமைகளை முடித்து
வந்தாள்.

ஒரு நாள் அந்த பாட்டியின் ஞாபகம்
தேவதைக்கு வந்தது.
"காடி குடுவையில் வாழ்ந்து வந்த  பாட்டி
எப்படி இருக்கிறாளோ?" என்று
எண்ணினாள்.



ஒரு நாள் தேவதை பாட்டியை பார்க்க மாடி வீட்டிற்கு வந்தாள். பாட்டியும் விலையுயர்ந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து புலம்பிக் கொண்டிருந்தாள் .
“என்ன பாவம் நான் செய்தேனோ!
நான் இந்த சிறிய மாடி வீட்டில் அடைந்து கிடக்கிறேன்
என்னை போன்ற பெண் ஒரு மலை மேல் இருக்கும் மாளிகை வீட்டில் அல்லவா வசிக்க வேண்டும். கூப்பிட்டால் வேலை செய்வதற்கு வேலைக்காரர்கள் ஓடி வர வேண்டாமா!
அந்த வாழ்க்கை தானே என்போன்ற பெண்மணிக்கு அழகு.”

பாட்டி புலம்புவதை கேட்டு கொண்டிருந்த தேவதை ஆச்சரியம் அடைந்தாள்.

சரி!
“மாளிகை வீடு தான் வேண்டுமென்றால் அப்படியே ஆகட்டும்.”
என்று வயதான பாட்டியிடம் தேவதை கூறினாள்.
“நீ இன்று இரவு மெத்தையில் உறங்க போகும் போது
மூன்று முறை திரும்பி படுத்து கண்ணை மூடிக்கொள்
அடுத்த நாள் உனக்கு என்ன வேண்டுமோ அதை நீ அடைவாய்”
என்று கூறி சென்றாள் தேவதை.

மெத்தையில் இரவு உறங்க போன போது தேவதை சொன்னது போல
மூன்று முறை திரும்பி படுத்து கண்ணை மூடி கொண்டாள்.
காலையில் கண்விழித்து பார்த்தாள்.





பாட்டி ஒரு அழகான மாளிகை வீட்டில் இருந்தாள். அது மலை மேல் இருந்தது.
எனக்கு உகந்த வீடு இது தானே
நான் இதில் சந்தோஷமாக இருக்க போகிறேன் என்றாள் பாட்டி
இப்போதும் தான் நினைத்தது கிடைத்த போதும் பாட்டி ஒரு முறை கூட மனதில் தேவதைக்கு நன்றி கூறவில்லை

தேவதையும் மேற்கு திசைக்கு சென்றாள்
பிறகு தெற்கு திசைக்கு சென்றாள்
அதன் பின் வடக்கும், கிழக்கும் சென்றாள்
அவளுடைய கடமைகளை முடித்து வந்தாள்.

ஒரு நாள் அந்த பாட்டியின் ஞாபகம் தேவதைக்கு வந்தது.
“காடி குடுவையில் வாழ்ந்து வந்த பாட்டி எப்படி இருக்கிறாளோ?” என்று எண்ணினாள்.





ஒரு நாள் தேவதை பாட்டியின் அருகில் வந்த போது
பாட்டி ஒரு விலையுயர்ந்த பட்டு துணியால் அலங்கரிக்கப்பட்ட ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தாள்.
“என்ன பாவம் நான் செய்தேனோ!
நான் இந்த பழைய மாளிகை வீட்டில் அடைந்து கிடக்கிறேன்
என்னை போன்ற பெண் ராணியாக அரண்மனையில் அல்லவா வசிக்க வேண்டும். எனக்கு பொழுது போவதற்கு இசை
கலைஞர்கள் வேண்டாமா! நான் வந்தால் ஒரு சபை தலை வணங்கி நிற்க வேண்டாமா!
அந்த வாழ்க்கை தானே என்போன்ற பெண்மணிக்கு அழகு.”

ஐயோ கடவுளே இந்த பாட்டியின் ஆசைக்கு அளவே இல்லையா? என்று நினைத்தாள் தேவதை.
“அது தான் வேண்டும் என்றால் அப்படியே நடக்கட்டும்”



“நீ இன்று இரவு மெத்தையில் உறங்க போகும்
போது
மூன்று முறை திரும்பி படுத்து கண்ணை மூடி
கொள்
அடுத்த நாள் உனக்கு என்ன வேண்டுமோ அதை நீ
அடைவாய்” என்று கூறி சென்றாள் தேவதை.

மெத்தையில் வேகமாக தூங்க
போனாள் பாட்டி.
மூன்று முறை திரும்பி படுத்து
கண்ணை மூடி கொண்டாள்.
காலையில் கண்விழித்து
பார்த்தாள்.



இசை கலைஞர்கள் இசைக்கருவிகள் வாசிக்க , சேவகர்கள்
படை சூழ  பாட்டி ஒரு அரண்மனையில் இருந்தாள்.
“எனக்கு உகந்த வீடு இது தானே
நான் இதில் சந்தோஷமாக இருக்க போகிறேன்” என்றாள்
பாட்டி
எப்போதும் போல தான் நினைத்தது கிடைத்த போதும் பாட்டி
ஒரு முறை கூட மனதில் தேவதைக்கு நன்றி கூறவில்லை.

தேவதையும் மேற்கு திசைக்கு சென்றாள்
பிறகு தெற்கு திசைக்கு சென்றாள்
அதன் பின் வடக்கும், கிழக்கும் சென்றாள்
அவளுடைய கடமைகளை முடித்து வந்தாள்.



ஒரு நாள் அந்த பாட்டியின் ஞாபகம்
தேவதைக்கு வந்தது.
காடி குடுவையில் வாழ்ந்து வந்த பாட்டி எப்படி
இருக்கிறாளோ என்று எண்ணினாள்.

தேவதை அரண்மனைக்கு சென்ற போது பாட்டி
சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தாள்.

"என்ன பாவம் நான் செய்தேனோ!
நான் இந்த சிறிய நாட்டின் ராணியாக
இருக்கிறேன்
என்னை போன்ற பெண் இந்த ப்ரபஞ்சத்திற்கே
பேரரசியாக இருக்க வேண்டுமா! பேரரசியாக
இருக்க வேண்டுமா!
அந்த வாழ்க்கை தானே என்போன்ற
பெண்மணிக்கு அழகு." என்று புலம்பினாள்
பாட்டி.

"அப்படியா, சில பேர்
எதற்கும், எப்போதும்
திருப்தி அடைய
மாட்டார்கள்.
எது வேண்டும் நீ
நினைக்கிறாயோ,
அது உனக்கு
கிடைக்கவே
கிடைக்காது." என்று
நினைத்துக்
கொண்டாள்
தேவதை.



“நீ இன்று இரவு மெத்தையில் உறங்க
போகும் போது
மூன்று முறை திரும்பி படுத்து
கண்ணை மூடிக்கொள்
அடுத்த நாள் உனக்கு என்ன
வேண்டுமோ அதை நீ அடைவாய்”
என்று கூறி சென்றாள் தேவதை.

மெத்தையில்  உறங்க போனாள்
பாட்டி.
மூன்று முறை திரும்பி படுத்து
கண்ணை மூடி கொண்டாள்.
காலையில் கண்விழித்து பார்த்தாள்.







பழைய காடி குடுவைக்குள் இருந்தாள் பாட்டி.
“இங்கேயே நீ கெட” என்றாள் தேவதை
இங்கு நீ மன நிறைவோடு வாழமுடியவில்லை  என்றால்
நீ எங்குமே மனநிறைவோடு வாழமாட்டாய் என்றாள் தேவதை.



“மனிதருக்கு மகிழ்ச்சி என்பது அகத்தில் உள்ளதே
தவிர புறத்தில்  இல்லை.”